முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்.

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.274/2025 இன் அ.வ.எண்.09/2021

மூர்த்தி ..... மனுதாரர்/ பிரதிவாதி

/எதிர்/

பழனிசாமி ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 25.3.2026 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.K.வைத்தியலிங்கம் அவர்கள் அஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. S.சாந்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

**உத்தரவு**

இம்மனு உரிமையியல் நடைமுறைசட்டம், 1908 உத்தரவு 8 விதி 1A(3) ன் கீழ் நீதிமன்றத்தில் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரரால்/பிரதிவாதி தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-</u>

வழக்கு பிரதிவாதி தரப்பு சாட்சியங்களுக்காக இருப்பதாகவும், தனது வழக்கை

நிரூபிப்பதற்காக, வழக்கில் சாட்சி எண் 2-ஐ (PW2) மீண்டும் விசாரணைக்கு அழைப்பதற்கும் வழக்கை reopen செய்யவதற்காகவும் மனு தாக்கல் செய்து IA.No 185/2025 ,IA.No.186/2025 அவை 24.10.2025 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், வழக்கில் PW2 யை, நீதிமன்றத்தின் முன் OS.No.11/2021 வழக்கில் PW-2 ஆக விசாரிக்கப்பட்டதாகவும், PW2 சாட்சிய சான்றிட்ட நகலை ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளதாகவும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் மிகவும் முக்கியமானது என்றும், எனவே, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை தன தரப்பு ஆவணமாகக் ஏற்றுக்கொண்டு உத்தரவிட வேண்டப்பட்டுள்ளது.

<u>3. எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்</u>:-

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய் என்றும், ஏற்புடையது அல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது

மனுதாரர் தனது மனுவில் அசல் வழக்கு எண்.11/2021 ல் வாதி தரப்பு 2 ம் சாட்சியாக விசாரிக்கப்பட்ட வேலு அவர்களின் சாட்சிய நகலை வழக்கில் ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், ஆவணத்தை மனுதாரர் மூலமாக குறியீடு செய்ய இயலாது என்றும், மேலும் சாட்சியமானது அந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்டதாகும் என்றும், இவ்வழக்கிற்கு சாட்சியத்தின் நகல் அவசியமற்றதாகும் என்றும், மனுதாரர் வேண்டுமென்றே காலங்கடத்தவே பல மனுக்களை தாக்கல் செய்து வருகிறதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு செய்யபடவேண்டியது என

குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6.தீர்வு :-

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு ஆட்சேபனை, வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. வழக்கு recovery of money பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

மனுவில் வழக்கில் (PW2) மீண்டும் விசாரணைக்கு அழைப்பதற்கு மனு தாக்கல் செய்து IA.No 185/2025 ,IA.No.186/2025 24.10.2025 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், OS.No.11/2021 வழக்கில் PW-2 ஆக விசாரிக்கப்பட்டதாகவும், இவ்வழக்கிற்கு அவசியமான PW2 சாட்சிய சான்றிட்ட நகலை ஏற்கவேண்டுமென்றும், மாறாக, மனுவில் அசல் வழக்கு எண்.11/2021 ல் வாதி தரப்பு 2ம் சாட்சியாக விசாரிக்கப்பட்ட வேலுவின் சாட்சிய நகலை வழக்கில் ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், ஆவணத்தை மனுதாரர் மூலமாக குறியீடு செய்ய இயலாது என்றும், மேலும் சாட்சியமானது அந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்டதாகும் என்றும், இவ்வழக்கிற்கு சாட்சியத்தின் நகல் அவசியமற்றதாகும் என்றும், மனுதாரர் வேண்டுமென்றே காலங்கடத்தவே பல மனுக்களை தாக்கல் செய்து வருகிறதாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளததையும் பரிசீலினை செய்ததில், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட

ஆவணமான வா.சா.2 வேலு குறுக்குவிசாரணை பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ஆகும். அது பொருத்து எதிர்தரப்பு செய்த ஆட்சேபனையும் கருத்தில் கொண்டு மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது நிராகரிக்கப்பட வேண்டுமா என்ற முடிவினை ஒரு நீதிமன்றமானது குறியீடு செய்யும் நேரத்தில் முடிவு எடுக்க வேண்டுமே தவிர அதை பெற்றுக்கொள்ளும் நேரத்திலே நிராகரிக்க கூடாது என்று வழிகாட்டுதலின் அடிப்படையிலும் உத்தரவு 7 வதி 14 (3) CPC படியும் மனுவுடன் தாக்கல் செய்த ஆவணங்களை தற்போது பெற்றுக்கொள்வததினால் எதிர்தரப்புக்கு பாதகம் ஏற்படாத என்பதாலும் அந்த ஆவணங்கள் அதன் ஏற்புடைதன்மையை பொருத்து குறியீடு செய்யும் நேரத்தில் தீர்மானிக்கப்படும் **(Receiving of Documents is different from Marking of documents)** என்பதாலும் Subject to Admissibility அனுமதிக்கலாம் என நீதியின் நலன் கருதி தீர்மானிக்கிறது.

**7.** முடிவாக, இம்மனு ஆவணங்களை ஏற்கும் தன்மை பொறுத்து அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சொல்ல சொல்ல தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் , 7 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd- S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd- S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு

வ.வி.எண்.274/2025

இன்

அ.வ.எண்.9/2021

நாள்.07.04.2026